படைத்தவர்கள் கூட கொடுக்க முன்வரவில்லை. கோவை மாவட்டத்தில் ஒரு விவசாயி கட்ட முன்வரவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் அதைப்பற்றி விசாரித்தபோது அவர் பெரிய மிராசுதாரராக இருக்கிறார் என்பது தெரிய வந்தது. அப்பேர்பட்டவர்களும் கொடுக்க முன்வர மாட்டேன் என்கிறார்கள். கோவை மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் பெரிய மிராசுதாரர் களாக இருப்பவர்கள்கூட கொடுக்க முன்வரவில்லை. ஆகவே, நியாயமான குறைகளைச் சொன்னால் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். வசதி உடையவர்கள் கட்டாமல் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்ற வர்கள் அவர்கள் கட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(4) அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டப் பேரவை 193 (1)-வது விதியின்கீழ் பின்வரும் சட்டப் பேரவை உறுப்பினர்களை 1974-75-ம் ஆண்டின் அலுவல் ஆய்வுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கிறேன் :—

1. மாண்புமிகு முதலமைச்சர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு திரு. க. அன்பழகன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.
4. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து, அரிசன நலத் துறை அமைச்சர்.
5. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழிற் துறை அமைச்சர்.
6. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
7. திரு. து. ப. அழகமுத்து, தலைமை அரசுக் கொறடா.
8. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.
9. திரு. க. உரொ. எட்மண்ட்.
10. திரு. ஏ. ஆர். பெருமாள்.
11. திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்.
12. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.

13. திரு. பி. வெங்கடசாமி.

14. திரு. கே. டி. கே. தங்கமணி.

15. திரு. மனலி சி. கந்தசாமி.

16. திரு. இ. எஸ். தியாகராஜன்.

பேரவையின் 193 (1)-வது விதியின் கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக, இக்குழுவின் தலைவர் ஆவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உற்பத்தி பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

5. நடைமுறைக் கேள்விகள்.

(அ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு கைத்தறித் துணிகள் (உறபத்தி பகிர்ந்து அளித்தல், விற்பனை) சட்ட முன்வடிவு மத்திய சட்டத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் முரணாக இருப்பதாகவும் அதனால் அதை சட்டப் பேரவை விவாதிப்பது முறைதானா என்பது குறித்து.

DR. H. V. HANDE: Sir, on a point of order. Before the Bill is introduced, I want to raise a point of order. Sir, with your permission, I want to raise the point of order, because members are allowed to raise points of order, if the Bill sought to be introduced contravenes any Article of the Constitution; and it is this way. Article 251 clearly mentions that any Bill of the State should not be repugnant to the Central Act. In this particular Bill, in the Statement of Objects and Reasons, it has been mentioned that this Billalmost replaces the Cotton Textiles (Control) Order in force under the Essential Commodities Act of 1955 which is a Central Act. This replaces one of the orders passed in 1948, the provisions of which are under the 1955 Act. This order is a child of the original Central Act 10 of 1955. Now the Hon. Minister is coming here to have a State Act, which directly contravenes the Central Act. It is clearly said that 'nothing in articles 249 and 250 shall restrict the power of the Legislature of a State to make any law which under this Constitution it has power to make', but where there is inconsistency between the Parliament law and State law,